*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(1), 2022*

# ஆப்ரகாமிய சமயங்களது நோக்கில் விலங்குரிமையும் பாதுகாப்பும்: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு

**மாரிமுத்து பிரகாஷன்**
தத்துவவியல் மற்றும் விழுமியக்கற்கைகள் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

Correspondence: prahasankm@esn.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்**

*மனித வாழ்வியலை வழிநடாத்துவதில் சமயங்களது வகிபாகம் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. உலகின் பல பாகங்களிலும் மனிதர்கள் சமய வழிகாட்டல்களை பின்பற்றத் தொடங்கியமையும் நாகரீக வளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாகும். இந்த வழிகாட்டல்களில் ஒன்று இயற்கையில் ஒரு அங்கமாக, தங்களில் இருந்து வேறுபட்டவையாக இருக்கும் விலங்குகளை எவ்வகையில் கையாழ்வது என்பது பற்றியதாக உள்ளது. புராதன காலத்தில் இருந்து பின்பற்றப்பட்டுவரும் இந்த போதனைகள் மனித ஆழ்மனதில் பதிந்து சமகாலத்திலும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான உறவில் தாக்கம் செலுத்துபவையாக அமைந்துள்ளன. சமயங்கள் அவை தோற்றம்பெற்ற காலம், இடம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு மாறுபட்ட போதனைகளைக் கொண்டுள்ளன என்ற அடிப்படையில் விலங்குகள் நோக்கப்படும் விதமும் மாறுபட்டதாகவே அமைந்துள்ளன. விலங்குகளது நலன்கள் மற்றும் உரிமைகள் தொடர்பான சிந்தனைகளும் செயற்பாடுகளும் முக்கியத்துவம் பெற்று வருகின்ற இந்த காலப்பகுதியில் ஆப்ரகாமிய சமயங்களான யூதாயிசம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவற்றில் இவ்விடயங்கள் தொடர்பில் எவ்வகையான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை ஆராய்ந்து வெளிப்படுத்துவதனை இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் ஊடாக சமகால விலங்குநலன்சார் செயற்பாட்டாளர்கள் சமயங்களது கற்பிதங்களை தங்களுடைய முன்னெடுப்புக்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படும். பண்புசார்ந்ததாக இரண்டாம்நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு முன்னாய்வாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலகலாவிய ரீதியில் மக்களது வாழ்க்கைமுறைகளும் பண்பாடுகளும், கலாசாரங்களும் மாறுபட்ட வகையில் வடிவமைக்கப்படுவதற்கு பின்பற்றப்படுகின்ற சமயங்களும் காரணமாகவுள்ளன. இந்த நிலையில் மக்கள் தங்களது அன்றாட செயற்பாடுகளிலும், அழகுணர்ச்சியிலும், கௌரவத்தின் அடையாளமாகவும், உணவுக்காகவும், விஞ்ஞான ஆய்வுகளுக்காகவும், விலங்குகளை பயன்படுத்துகின்ற விதங்களில் மாறுபாடுகள் காணப்படுவதற்கு சமய வழிகாட்டல்கள் எவ்வகையில் தாக்கம் செலுத்துபவையாக அமைந்துள்ளன? இந்த வழிகாட்டல்கள் ஊடாக இலக்காகக் கொள்ளப்படுவது மனிதர்களது நன்மையா அல்லது விலங்குகளது நன்மையா? சமகால விலங்குநலன்சார் செயற்பாடுகளுக்கு எத்தகைய வலுப்படுத்தல்களை சமய போதனைகள் ஊடாக வழங்க முடியும்? என்பன இவ்வாய்வின் பிரதான வினாக்களாக அமைந்துள்ளன. கருணை மனப்பாங்கு மனிதர்கள் அல்லாத விலங்குகள் தொடர்பிலும் விஸ்தரிக்கப்படுவது அவற்றின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாப்பதற்கு இன்றியமையாத ஒன்றாக இருப்பது கண்டறியப்பட்ட பிரதான விடயமாக அமைந்துள்ளது.*

**பிரதான சொற்கள்:** *ஆப்ரகாமிய சமயங்கள், விலங்கு பாதுகாப்பு, விலங்குரிமை, மானுடமைய வாதம்*

## 1. அறிமுகம்

விஞ்ஞானிகள் மனிதர்களும் குறித்த சில விலங்குகளும் ஒரு பொதுவான மூதாதையரைக் கொண்டிருந்த நிலையில் மில்லியன் வருடங்களுக்கு முன்னர் மனித இனம் தன்னுடைய பரிணாம வளர்ச்சியில் மாறுபட்டு வளர்வதற்குரிய ஒரு பிரிவு தற்செயலாக ஏற்பட்டது என்று குறிப்பிடுகின்றனர். இதன்படி விலங்குகளது பின்னணியினைக் கொண்டிருந்த மனிதன் அதிலிருந்து வளர்ந்து தற்போதைய நிலையினை அடைவதற்கு பல்லாயிரம் ஆண்டுகால வளர்ச்சி தேவையாக இருந்துள்ளது என்பதனை அறிய முடிகின்றது. இவ்வளர்ச்சியில் மொழிப்பிரயோகம், கருவிப்பயன்பாடு, தீயின் உபயோகம், பகுத்தறிவுச்சிந்தனை என்பவை மனிதர்களுக்கு தனித்துவமானவையாக அமைந்துள்ளன. இதுவே மனிதர்கள் விலங்குகளை தங்களது நுகர்வுக்குரிய இயற்கையின் அங்கங்கள் என்ற கண்ணோட்டத்தினை பெறுவதற்குரிய சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது. இத்தகையதாகி மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான உறவு மிக நீண்டதாக உள்ளது. புராதன வேட்டையாடல் மற்றும் சேகரிப்புச் சமூகத்தில் (Hunter and Gatherer Society) வேட்டையாடுதலின் ஊடாக பெறப்பட்ட மாமிசம் பிரதான உணவாக இருந்துள்ளதுடன் விலங்குகளின் பல், எலும்பு, மண்டையோடு, தோல் என்பன கௌரவத்தின் அடையாளமாகவும், அலங்காரமாகவும், உடையாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அக்கால மனிதர்கள் தாம் எதிர்கொண்ட விலங்குகளை ஓவியங்களாகவும் வரைந்துள்ளமை புராதன குகையோவியங்களில் இருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

இதன் அடுத்தகட்ட வளர்ச்சியிலேயே அனைத்து விடயங்களும் ஆன்மாவினைக் கொண்டுள்ளன (Animism), இறந்தவர்களது ஆன்மா அவர்களது சந்ததிகளுடன் தொடர்பில் இருக்கின்றது என்ற நம்பிக்கைகளும், அந்த ஆன்மாக்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக பலியிடல்களை மேற்கொள்ளத் தொடங்கியமையும், குறிப்பிட்ட சில விலங்குகளை வணக்கத்திற்குரியவையாக மாற்றியமையும் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக எகிப்திய நாகரீக வளர்ச்சியில் பல்வேறு விலங்குகள், பறவைகள் என்பன புனிதமானவையாக கருதப்பட்டு வணக்கத்திற்குரியவையாக இருந்துள்ளன. கடவுள்கள் விலங்குகளின் உடலமைப்பில் அமைக்கப்பட்டனர் (Theriomorphic), விலங்குகள், பறவைகளது இறந்த உடல்கள் பதப்படுத்தப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளன. அதே சந்தர்ப்பத்தில் எகிப்திய நாகரீகத்தின் சமகாலத்திற்குரிய கிரேக்க உரோம நாகரீகங்களில் இப் பழக்கங்கள் சிறியளவில் பின்பற்றப்பட்டுள்ளன, கடவுள்கள் விலங்குகளுடன் இணைத்து வழிபடப்பட்டனர். விலங்குகளை கடவுள்களுக்கு பலியிடுவதும் புராதன மத்திய தரைக்கடல் பிராந்தியத்தில் பின்பற்றப்பட்ட ஒரு சம்பிரதாயமாக இருந்துள்ளது (Gilhus, 2006, p. 95-105).

நிலையான வாழிடங்களை அமைத்துக்கொண்டு விவசாய செயற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்தபோது குறிப்பிட்ட சில விலங்குகளை தங்களுடன் வளர்க்கவும், அவற்றினை பயன்படுத்துவதன் ஊடாக தங்களது உடமைகளை பாதுகாக்கவும், வேலைகளை இலகுவாக மேற்கொள்ளவும், அதிகரித்த இலாபத்தினை பெறுவதற்கும் ஆரம்பித்தனர். இவ்வாறாக விலங்குகளை பயன்படுத்தும் வளர்ச்சிப்படிமுறையில் விஞ்ஞானத்தின் வளர்சியுடன் மனித உடலமைப்பினை புரிந்துகொள்வதற்கு விலங்குகளை அறுத்து பரிசோதனைகளை மேற்கொண்டமையும், நோய்களையும் அவற்றிற்கான மருந்துகளையும் பரிசோதனை செய்வதற்காகவும் விலங்குகளை பயன்படுத்துவதும் என மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமான தொடர்பு இருந்துவருகின்றது. இவ்விடயங்கள் ஊடாக மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான தொடர்பு மிகவும் நீண்ட வரலாற்றினைக் கொண்டதாக குறிப்பாக மனிதர்கள் சமயங்களை பின்பற்றத் தொடங்குவதற்கும் முற்பட்டதாக இருந்து வளர்ந்து வந்துள்ளமையினை அறிந்துகொள்ள முடிகின்றது.

நாகரீக வளர்ச்சியில் சமயங்கள் மிகவும் காத்திரமான வகிபாகமுடையவையாக உள்ளன. தனிமனித மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான வழிகாட்டல்களை வழங்கி ஒன்றிணைந்த வகையில் மேல்நோக்கிய வளர்ச்சிக்கு இவை பங்களிப்பு செய்துள்ளன. புராதன மொசபத்தேமிய, பபிலோனிய, எகிப்திய, இந்திய, சீன நாகரீகங்களில் இவற்றின் ஆரம்பகட்டங்களை அடையாளப்படுத்த முடிகின்றது. இவற்றில் விலங்குகளை எவ்வாறு கையாள வேண்டும் அல்லது விலங்குகள் தொடர்பில் மனிதர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற வழிகாட்டல்களும் இடம்பெற்றிருந்தன. இதற்கு ஏற்கனவே விலங்குகள் மனிதர்களுக்கு பயன்மிக்கவையாகவும், குறிப்பிட்ட சில விலங்குகள் மரியாதைக்குரியவையாகவும் மாறியிருந்தமை காரணமாக அமைந்திருந்தது. இந்த சமயங்களில் ஓரிறைக்கொள்கையினை முன்நிலைப்படுத்துகின்ற ஆப்ரகாமிச சமயங்களான யூதாயிசம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய ஐரோப்பிய மற்றும் அராபிய பிராந்தியங்களில் தோன்றிய சமயங்களும் இயற்கையோடு இணைந்த வகையில்

பன்மைத்துவ இறைவழிபாட்டினை முன்வைக்கின்ற சநாதன தர்மம் மற்றும் அகிம்சையினை முன்நிலைப்படுத்திய ஜைனம், பௌத்தம் ஆகிய இந்திய துணைக்கண்டத்தில் தோன்றிய சமயங்களும் பிரதான இடம் பெறுகின்றன.

## 2. ஆய்வுப் பிரச்சினை, வினாக்கள், நோக்கம் மற்றும் முறையியல்

சமய போதனைகள் மனிதர்களது ஆழ்மனதில் கனதியான பதிவினை ஏற்படுத்தி தலைமுறைகளாக விலங்குகள் தொடர்பில் அவர்கள் சிந்திக்கின்ற, உணர்கின்ற, செயற்படுகின்ற விதங்களில் தாக்கம் செலுத்துபவையாயுள்ளன. இந்த ஒவ்வொரு சமயங்களையும் உறுதியாக பின்பற்றுகின்ற மனிதர்கள் விலங்குகள் தொடர்பில் கொண்டுள்ள மனப்பாங்கு மாறுபட்டதாகும். சில சமயங்கள் வளர்ச்சிப்படிநிலையில் மனிதர்களை கடவுளுக்கு அடுத்தநிலையில் வைத்து விலங்குகளை இயற்கைப்பொருற்களில் ஒன்றாக, மனிதர்களது நுகர்வுக்குரியதாக நோக்குகின்றன. சில சமயங்கள் மனிதர்கள் விலங்குகளாகவும் விலங்குகள் மனிதர்களாகவும் மறுபிறப்பெடுக்கின்ற இயல்புடையவை என்ற நம்பிக்கையில் மனிதர்கள் விலங்குகளை சிறிய துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவதும் கூடாது என்ற நிலைப்பாட்டினை வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு மாறுபட்ட நிலைப்பாடுகள் சமயங்களில் காணப்படுவது இந்த ஆய்வினை மேற்கொள்ளத்தூண்டிய பிரதானமான பிரச்சினையாகும். இந்த நிலையிலேயே மனிதர்கள் விலங்குகளை பயன்படுத்துகின்ற விதங்களில் மாறுபாடுகள் காணப்படுவதற்கு சமய வழிகாட்டல்கள் எவ்வகையில் தாக்கம் செலுத்துபவையாக அமைந்துள்ளன? இந்த வழிகாட்டல்கள் ஊடாக இலக்காகக் கொள்ளப்படுவது மனிதர்களது நன்மையா அல்லது விலங்குகளது நன்மையா? சமகால விலங்குநலன்சார் செயற்பாடுகளுக்கு எத்தகைய பங்களிப்புக்களை ஆப்ரகாமிய சமய போதனைகள் ஊடாக வழங்க முடியும்? என்பன இந்த ஆய்வினை முன்நகர்த்தும் வினாக்களாக அமைந்துள்ளன. இதனூடாக வெவ்வேறு சமயங்கள் விலங்குகள் தொடர்பில் முன்வைக்கும் கருத்துக்கள் மாறுபட்டநிலைகளில் இருக்கின்ற போது அவை தொடர்பில் தெளிவாக அறிந்துகொண்டு ஒப்பிட்டு நோக்கி விலங்குகளது நலன்கள் மற்றும் உரிமைகள் தொடர்பில் பரவலான கருத்து முன்வைப்புக்களும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தற்போதைய நிலையில் ஆப்ரகாமிய சமயங்களான யூதாயிசம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவற்றின் வழிகாட்டல்கள் அவற்றிற்கு எந்த வகையில் பங்களிப்பு செய்வதற்கு பயன்படுத்த முடியும் என்பதனை அறிந்து வெளிப்படுத்துவது இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. பண்புசார்ந்ததாக இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு முன்னாய்வாக (Descriptive Research) இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்பொருட்டு ஏற்கனவே இவ்விடயம் தொடர்பில் ஆய்வினை மேற்கொண்டு எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் மற்றும் புத்தகங்கள் என்பன வாசிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சமய நூல்களில் உள்ள கருத்துக்கள் அந்த சமய நூல்களில் இருப்பது மீளுருதி செய்யப்பட்டு இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 3. இலக்கிய மீளாய்வு

### *3.1 ஆதியாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள்*

ஆப்ரகாமிய சமயங்கள் மூன்றிற்கும் பொதுவான ஆரம்பமாக ‘ஆதியாகமம்’ (Genesis) அமைந்துள்ளது. இதில் ஆரம்பத்தில் படைத்தல் செயற்பாட்டினை ஆரம்பித்த கடவுள் ஒளி, ஆகாயம், நிலம், கடல், தாவரங்கள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கடலில் வாழ்கின்ற உயிரினங்கள், பறவைகள் என்பவற்றினை முதல் ஐந்து நாட்களில் படைத்த பின்னர் ஆறாவது நாளில் நிலத்தில் வாழ்கின்ற விலங்குகளையும் இறுதியாக ‘தன்னுடைய சாயலில்’ மனிதனையும் அவனது விலா எழும்பில் இருந்து பெண்ணையும் படைத்து “பயனுடையவர்களாக இருங்கள், பல்கிப்பெருகி பூமியை நிரப்பி அதனை வெற்றிகொள்ளுங்கள், கடலில் உள்ள மீன்கள் அனைத்தையும், வானத்தில் பறக்கும் பறவைகள் மற்றும் நிலத்தில் நகர்கின்ற அனைத்து வாழ்கின்ற உயிரினங்கள் என அனைத்தையும் உங்கள் ஆளுகையின்கீழ் கொண்டுவாருங்கள்” என்று கூறி ஆசிர்வதித்தார் என்று குறிப்பிடப்படுகின்றது (ஆதியாகமம் 1:1 – 2:3). இது பிற்காலத்தில் விருத்திபெற்ற மானுடமையவாதசிந்தனையின் (Anthropocentrism) ஆரம்ப ஊற்றாக அமைகின்றது. அதாவது, இங்கு இறைவன் தன்னுடைய சாயலிலேயே மனிதனைப்படைத்தார் என்பதும் ஏனையவற்றினை ஆளுகை செய்வதற்கு ஆசிர்வதித்தார் என்பதும் இறைவனுக்கு அடுத்தநிலையில் உள்ள மனிதன் இவ்வுலகினை தன்னுடைய தேவைக்காக எவ்வாறு

வேண்டுமாயினும் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற மனப்பாங்கின் விருத்திக்கு பங்களிப்பு செய்த ஒரு போதனையாக கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக ஆதாம் மற்றும் ஏவாளின் பதினாறாவது தலைமுறையில் தோன்றிய 'நம்பிக்கையின் தந்தை' என்று குறிப்பிடப்படும் ஆப்ரகாம் தன்னுடைய மகனுக்குப்பதிலாக ஆட்டுக்குட்டியினை இறைவனுக்கு பலியிடுவதற்கு அனுமதிக்கப்பட்டமையானது இறைவனை மகிழ்ச்சிப்படுத்தி நல்வாழ்க்கைக்கான ஆசிர்வாதத்தை பெற்றுக்கொள்வதற்கு விலங்குகள் பலியிடப்படுவதற்கு இறைவனாலேயே அனுமதிக்கப்படுகின்றது என்ற கற்பிதத்தினை வழங்குகின்றது. ஏனெனில் இந்த பலியிடலின் பின்னரே 'வானத்தின் விண்மீன்கள் போலவும், கடலின் மணல்கள் போலவும் உன்னுடைய பரம்பரையினர் எண்ணற்ற வளர்ச்சியினை பெறுவார்கள்' என்ற ஆசிர்வாதம் ஆப்ரகாமிற்கு வழங்கப்பட்டது. இவரே யூதாயிசம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மூன்று சமயங்களிற்கும் பொதுவான ஆரம்பமாக அறியப்படுகின்றார். இவ்வாறாக வளர்ந்த தலைமுறைகளில் ஒழுக்கக்கேடுகள், முரண்பாடுகள், தீமைகள் நிறைந்த நிலையில் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தி அழிவினை ஏற்படுத்திய கடவுள் நோவாவின் படகில் உலகில் உள்ள அனைத்து உயிரினங்களில் இருந்தும் ஒவ்வொன்றினை பாதுகாப்பதற்கான வாய்ப்பினை வழங்கியமை அனைத்து உயிரினங்களும் பாதுகாக்கப்பட வேண்டியவையாக உள்ளன என்ற கற்பிதத்தினை வழங்குவதாக உள்ளது. ஆனால் வெள்ளப்பெருக்கின் முடிவின் படகில் இருந்து இறங்கிய நோவாவிற்கும் அவனுடைய குடும்பத்தினருக்கும் ''உயிர்வாழ்கின்ற மற்றும் நகர்கின்ற அனைத்தும் உங்களுக்கான உணவாக இருக்கும், நான் உங்களுக்கு பச்சைத்தாவரங்களை வழங்கியதுபோலவே தற்போது அனைத்தையும் தருகின்றேன்'' (ஆதியாகமம் 9:1-3) என்று ஆசிர்வதித்ததாக குறிப்பிடப்படுவது காப்பாற்றப்பட்ட விலங்குகளது சந்ததிகள் மனிதர்களினால் எதிர்காலத்தில் நுகர்வுக்கு உள்ளாக்கப்படுவதற்குமாக உள்ளது அதற்கான அனுமதியினை இறைவன் மனிதர்களுக்கு வழங்கியுள்ளார் என்று குறிப்பிடுவதாக உள்ளது. இங்கு விலங்குகள் மனிதர்களுக்கு இணையானவை அல்ல மாறாக கீழ்நிலைப்பட்டவை மற்றும் பயன்பாட்டிற்குரியவை என்ற கருத்து நிலைநிறுத்தப்படுகின்றது. (Gilhus, 2006, p. 162).

### *3.2 யூதாயிசம் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள்*

யூதசமயம் விலங்குகள் மனிதர்கள் போன்றே சமமான உணர்வுகளைக் கொண்டவை என்ற அடிப்படையில் அவை நியாயமான வகையில் நடாத்தப்படுவதற்கும், தேவையற்ற கொடூரங்கள் ஏற்படுத்துவதனை தவிர்ப்பதற்கும், இரக்கத்துடன் (Compassion) நடாத்தப்படுவதற்கும் முக்கிய இடம் கொடுப்பதாக உள்ளது. ஒரு மனிதன் விலங்குகள் தொடர்பில் நடந்துகொள்வதற்கும் மனிதர்கள் தொடர்பில் நடந்துகொள்வதற்கும் உள்ள தொடர்பு பற்றி குறிப்பிடப்படுகின்றது. தங்களை பாதுகாத்துக்கொள்ளும் திறனற்ற விலங்குகள் தொடர்பில் கொடூரமாக நடந்துகொள்கின்ற மனிதர்கள் அவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் உள்ள மனிதர்கள் மீதும் கொடூரமாகவே நடந்துகொள்வார்கள். அதுபோல விலங்குகள் தொடர்பில் கவனமெடுத்து செயற்படுபவர்கள் மனிதர்கள் தொடர்பிலும் கவனத்துடன் செயற்படுவார்கள். எனவே மனிதர்கள் விலங்குகளை சரியான முறையில் நடாத்துவது அவசியமாகின்றது என்று குறிப்பிடப்படுகின்றது. மேலும் யூத புனித நூலான தால்முத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களாக பெயர் குறிப்பிடப்படுபவர்கள் விலங்குகள் தொடர்பில் அதிக கரிசனை கொண்டவர்களாக குறிப்பிடப்படுகின்றனர். இதில் மோசஸ் விலங்குகளை கவனமாக பராமறிப்பதில் தேர்ச்சி பெற்றவராகவும், அன்பு மிக்கவராகவும், ஐசாக்கினுடைய மனைவி றெபேக்கா விலங்குகள் தொடர்பில் கணிவுள்ளம் கொண்டவளாக மனிதர்களது தாகத்திற்கு மாத்திரமல்லாது விலங்கினது தாகத்தையும் தானாகவே முன்வந்து போக்கியவளாகவும் குறிப்பிடப்படுகின்றது. உதாரணமாக வழிப்போக்கர் ஒருவரது வேண்டுகோளுக்காக அவருக்கு குடிப்பதற்கு நீரினை வழங்கிய பின்னர் அவள் ''உங்களது ஒட்டகங்களும் போதுமான அளவு குடிப்பதற்கு நான் நீரை வழங்குகின்றேன்'' என்று கூறி அங்கிருந்த ஏறத்தாள பத்து ஒட்டகங்களுக்கு நீரினை வழங்கியதாக குறிப்பிடப்படுகின்றது. (ஆதியாகமம் *24:17-19*). இது ''நியாயமான மனிதர்கள் விலங்குகளது தேவைகளை இயல்பாகவே அறிந்துகொள்வார்கள்'' என்ற பழமொழிக்கு இசைவான ஒரு காரியமாக அமைகின்றது (Isaacs, 2000, P. 150).

மற்மொரு புனித நூலான தோராவில் (Torah) மனிதர்கள் தங்களது நியாயமான தேவைகளுக்காக விலங்குகளை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவதாக உள்ளது. இதன்படி இறைச்சியை உணவாகவும், தோலினை உடையாகவும் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றது. ஆனால் குறித்த விலங்குகள் துன்பம் இல்லாது அல்லது குறைந்த துன்பத்துடன் உரிய கிரமங்களை பின்பற்றி விரைவில் கொல்லப்பட வேண்டும் என்பதுடன்

இவற்றில் ஏதேனும் இடர்கள் ஏற்படுமாயின் அவ்இறைச்சியினை நுகர்வுக்கு பயன்படுத்தக்கூடாது என்றும் அறிவுருத்தப்படுகின்றது. விலங்கு உயிருடன் இருக்கும்போது அதனுடைய அங்கங்களை வெட்டி உணவாக்குதலும் தடைசெய்யப்பட்டதாக உள்ளது. இவ்வாறு உணவுக்காக விலங்குகளை வெட்டுவதற்குரிய முறைகள் பரிந்துரை செய்யப்படுவதுடன் அதற்கான சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களினாலேயே அது மேற்கொள்ளப்படவும் வேண்டும். இவ்வாறு யூத சட்டத்தில் கூறியுள்ளபடி விலங்குகளை வெட்டுவதற்கு உத்தியோகபூர்வமாக அனுமதிக்கப்பட்டவர்கள் *shochet* என்று அழைக்கப்படுகின்றனர். இந்த 'முறைப்படுத்தப்பட்ட கொலை' இரண்டு நோக்கங்களைக் கொண்டதாக உள்ளது. முதலாவது விலங்குகளுக்கு மிகக்குறைந்த வலியுடன் மரணத்தை ஏற்படுத்துதல். இரண்டாவது இறந்த உடலில் இருந்து இரத்தத்தை முழுமையாக வெளியேற்றுதல். இரண்டாவது நோக்கமானது ஆன்மா அல்லது உயிர் தொடர்பான புராதன நம்பிக்கையுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது. அதாவது இரத்தமே உயிராக அல்லது ஆன்மா வாழ்கின்ற இடமாக குறிப்பிடப்படும் நிலையில் இரத்தம் உண்பதற்கு தடைவிதிக்கப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு காரணம் இறந்த விலங்கின் ஆன்மா அல்லது உயிர் அதனை உண்பவரின் உள்ளே சென்றுவிடக்கூடாது என்பதாக தோராவின் மூன்றாவது நூலான Leviticus இல் 17வது சரத்தின் 14வது பிரிவிலும் உபாகமத்தின் 12: 23-25 பிரிவிலும் குறிப்பிடப்படுகின்றது (Leviticus. 17:14; Deuteronomy. 12:23-25).

மேலும் பறவைகளின் முட்டைகளை நுகர்வுக்காக எடுக்கின்றபோது தாய்ப்பறவைக்கு உளத்தாக்கம் ஏற்படாமல் இருப்பதற்காக அது அறியாத வகையில் எடுக்க வேண்டும் எனவும் பசுவினையும் அதன் கன்றினையும் ஒரே நாளின் கொலை செய்தலாகாது எனவும் குறிப்பிடப்படுகின்றது ((Dorff, & Crane, 2013, p. 100). ஆறு நாட்களில் உலகினையும் மனிதர்களையும் படைத்த இறைவன் ஏழாவது நாளில் ஓய்வு எடுத்ததன் அடிப்படையில் மனிதர்களும் ஆறு நாட்கள் உழைப்பின் பின்னர் ஏழாவது நாள் ஓய்வு எடுக்க வேண்டும் என்றும் அந்த ஓய்வு மனிதர்களுடன் சேர்ந்து உழைக்கின்ற விலங்குகளுக்கும் உரியதாகின்றது (Exodus 20:10, 23:12). விலங்கிற்கு உணவு வழங்குவதற்கு வாய்ப்பில்லாத ஒருவர் அதனை வாங்கவோ வளர்க்கவோ கூடாது என்பதுடன் விலங்குகளின் உடமையாளர் அவற்றிற்கு உணவழங்கிய பின்னரே தான் உணவுற்கொள்ள வேண்டும் என்ற விதியும் முன்வைக்கப்பட்டுள்ளது (Deuteronomy 11:15). எந்தவொரு உயிரினத்திலும் ஆண் விலங்கினை மலடாக்கும் செயற்பாட்டினை (Castration) முற்றாக தடைசெய்துள்ளதுடன் பெண் விலங்குகள் நியாயமான காரணத்தை முன்னிட்டு கருத்தடை (Neutering) செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விலங்குகள் இறைவனுடைய படைப்பில் ஒரு அங்கமாக உள்ள நிலையில் அவை தொடர்பில் ஒருவர் கனிவுடன் நடந்துகொள்வது அவசியமாக உள்ளதுடன் அவற்றுக்கு பிற மூலங்களினால் ஏற்படக்கூடிய துன்பங்களை இல்லாது செய்வதற்கும் உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதன்போது குறித்த விலங்கு உரிமையாளர் அற்றதாகவோ அல்லது யூதர் அல்லாதவருடையதாகவோ இருக்க முடியும் (Regenstein, 2013, p. 4).

### *3.3 கிறிஸ்தவம் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள்*

கிறிஸ்தவ போதனைகள் கிரேக்க தத்துவப்பின்னணியினையும் உள்வாங்கிக்கொண்டு உரோமசாம்ராஜ்ஜிய காலத்தில் விலங்குகள் மனிதர்களை விட கீழான நிலையில் நடாத்தப்படுவதற்குரியவை என்ற மனப்பதிவினை ஏற்படுத்தியது என்றும் இது மேலைத்தேய மனப்பாங்கில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது. இதன்படி உரோமானியர்கள் குற்றவாளிகள், சிறைப்பிடிக்கப்பட்ட இராணுவவீரர்கள், நாகரீகமடையாதவர்கள், விலங்குகள் என நான்கையும் ஒரே அளவுகோல் கொண்டே நடாத்தியதுடன் இவர்களின் துன்பங்களையும், வலியினையும் தங்களது பொழுதுபோக்கிற்கான, வருமானமீட்டலுக்கான மூலமாக ஆக்கியிருந்தனர். இந்நிலையில் உரோமில் அறிமுகமான கிறிஸ்தவம் அனைத்து மனிதர்களும் ஒரே தரத்தினர், அவர்களது ஆன்மா புனிதமானது, மனிதர்களது ஆன்மா மாத்திரமே புனிதமானது அது துன்பங்களுக்கு உள்ளாக்கப்படக்கூடாது என்ற போதனையினை மேற்கொண்டு மனிதர்களை உரோமானியர்களது துன்புறுத்தல்களில் இருந்து பாதுகாத்தது, ஆனால் விலங்குகள் நுகர்வுப்பண்டங்களாக்கப்படுவதற்கான மனப்பாங்கினை வலுப்படுத்தியது (Singer, 1995, p. 192).

மேற்குறித்த மனிதர்களது நிலை கி.பி நான்காம் நூற்றாண்டில் மாற்றமடைந்த அதேவேளையில் விலங்குகளது நிலை மாற்றமடையாது தொடர்ந்தது. இதற்கு முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த இயேசு கிறிஸ்துவினுடைய செயற்பாடுகளும் காரணமாக அமைந்திருந்தன என்று வாதிடப்படுகின்றது. இதன்படி ஒரு சந்தர்ப்பத்தில் தீய சக்திகளை அழிப்பதற்காக அவற்றினை

இரண்டாயிரம் பன்றிகளுக்குள் இறக்கி அப் பன்றிகளை கடலினுள் தள்ளி மனிதர்களை காத்ததாக குறிப்பிடப்படுகின்றது. இது விலங்குகளும் மனிதர்களும் ஒரே தரத்தில் வைத்துப்பார்க்கப்பட வேண்டியவர்கள் அல்ல மனிதர்களது நன்மைக்காக விலங்குகள் பயன்படுத்தப்படலாம் என்ற அனுமதியினை இயேசுவே வழங்கியுள்ளார் என்பதாக பிற்காலத்தில் புனிதர் அகஸ்டினால் விளக்கமளிக்கப்படுகின்றது. எனினும் குறித்த விலங்குகளுக்கு பாதிப்பு இன்றி அத்தீமைகளை அகற்றுவதற்கான இயலுமை இயேசு கிறிஸ்துவுக்கு இருந்தும், அல்லது அது பற்றி சிந்திக்காமல் செயற்பட்டதும் விலங்குகளது நலன்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாக இல்லை என்பதனையே வெளிப்படுத்துகின்றது (Passmore, 1974, p. 11).

விலங்குகளுக்குள்ளும் படிநிலைகள் அமைக்கப்பட்டு நாய்களும் பன்றிகளும் மிகவும் கீழ்நிலைப்பட்டவையாக குறிப்பிடப்படுகின்றன. மாத்தேயுவின் 7:6 வது வாக்கியம் "ஒருவர் தன்னிடம் உள்ள புனிதமானவற்றை நாய்களுக்கு காட்டவோ தன்னிடம் உள்ள முத்துக்களை பன்றிகளுக்கு முன்னால் இடவோ மாட்டார்" என்று குறிப்பிடுவதானது குறித்த விலங்குகள் பெறுமதியற்றவை என்பதனை வெளிப்படுத்துகின்றது. அதேவேளையில் புறா உயர்வான மதிப்பிற்குரியதாக வெளிப்படுத்தப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் (New Testament) இன்றுமொரு புனிதரான போல் விலங்குகள் தொடர்பில் எதிர்மறையான கருத்துக்களையே வெளிப்படுத்தியுள்ளார். இதில் "எருதுகளுக்காகவா கடவுளின் அக்கரை உள்ளது?" (Is it for oxen that God is concerned?") என்று அவர் ஒரு சந்தர்ப்பத்தில் வினவியது தாழ்நிலையில் உள்ள விலங்குகளைவிட உயர்நிலையில் உள்ள மனிதர்கள் தொடர்பிலேயே இறைவன் அக்கரை கொண்டவராக செயற்படுகின்றார் என்ற கருத்தினை அவர் வெளிப்படுத்தியுள்ளார் என்று விளக்கமளிக்கப்படுகின்றது (Gilhus, 2006, p. 170-172). இக் கூற்றானது மோசசின் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள "எருதுகள் தானியங்களை மிதித்து செல்லும்போது அவற்றின் வாயினை கட்டாதீர்கள்" என்பது தானியங்களை தங்களது உழைப்பினால் உற்பத்தி செய்கின்ற எருதுகள் அவற்றினை தங்களது பசிக்காக உண்பதனை தடைசெய்யக்கூடாது என்ற கரிசனையினை வெளிப்படுத்துவதாக உள்ளது என்ற கருத்தினை முன்வைத்துள்ளபோது இறைவன் அவ்வாறு தாழ்நிலையில் உள்ள விலங்குகளுக்கு அல்லாமல் இறை ஊழியம் செய்பவர்கள் தங்களது போதனைகளினால் பயனடைபவர்களிடம் இருந்து உபகாரங்களை பெற்றுக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் புனிதர் போலினால் மீள் அர்த்தப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டது என்று குறிப்பிடப்படுகின்றது.

உரோமானிய சாம்ராஜ்ஜிய முடிவில் திருச்சபைகளது ஆதிக்கம் ஆரம்பித்த நிலையில் மேலைத்தேய வரலாற்றில் மத்தியகாலத்திற்குரிய இறையியல் சிந்தனையாளர்களான புனிதர்களான அன்செலம், அகஸ்டின், அக்வைனஸ் ஆகியோருடைய போதனைகளும் இவ்விடயத்தில் முக்கியத்துவம் பெறுபவையாக உள்ளன. குறிப்பாக 'முதல் மெய்யியலாளர்' என்று அழைக்கப்படுகின்ற அரிஸ்டோட்டிலின் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்த இவர்கள் இயற்கைக்கட்டமைப்பில் மனிதர்களை உயர்ந்த இடத்தில் வைத்து கீழான நிலையில் உள்ளவையாக குறிப்பிடப்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்குகள் மனிதர்களது விருப்பத்திற்கு, தேவைக்கு இணங்க பயன்படுத்தப்படுவதற்குரியவையாக உள்ளன என்ற கருத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். தோமஸ் அக்வைனஸ் தன்னுடைய Summa Theologica நூலின் பகுதி ஒன்றில் இருபதாவது பகுதியான 'கடவுளின் அன்பு' என்பதில் மூன்றாவது வினாவான 'கடவுள் அனைத்தையும் சமமாக அன்பு செலுத்துகின்றாரா?' என்பதற்கு "கடவுள் தான் படைத்த அனைத்தையும் நேசிக்கின்றார், மேலும் அவர் பகுத்தறிவுள்ள சிருஸ்டிகளை அதிகம் நேசிக்கின்றார், மேலும் இவர்களில் குறிப்பாக தம்முடைய ஒரே பேறான குமாரனின் அங்கத்தவர்களாக இருப்பவர்களை அதிகம் நேசிக்கின்றார்' என்ற பதிலை முன்வைத்துள்ளார். இது விலங்குகளது நலனை விட மனிதர்களின் நலனின் கடவுள் அதிக அக்கறை கொண்டிருக்கின்றார் என்பதனை வெளிப்படுத்துகின்றது. அதுபோல இரண்டாவது பகுதியின் இருபத்தைந்தாவது வினாவில் மூன்றாவது பகுதியாக அமையும் "பகுத்தறிவற்ற உயிரினங்களும் தர்மத்தின் அடிப்படையில் நேசிக்கப்பட வேண்டுமா?" (Whether irrational creatures also ought to be loved out of charity?) என்ற கேள்விக்கு 'தர்மத்தின் அடிப்படையிலான அன்பு இறைவனுக்கும் அயலவர்களுக்கும் மாத்திரமே உரியதாகும், அயலவர் என்பதில் பகுத்தறிவற்ற உயிரினங்கள் உள்வாங்கப்படாது, காரணம் அறிவார்ந்தமான வாழ்க்கையில் அவை மனிதர்களுடன் எந்த கூட்டுறவினையும் கொண்டவையாக இல்லை, எனவே தர்மம் என்பது பகுத்தறிவற்ற உயிரினங்கள் தொடர்பில் பிரயோகிக்கப்படுவதற்கு இல்லை' என்ற பதிலை முன்வைத்துள்ளார். இது சமமான அந்தஸ்தில் உள்ள மனிதர்களுக்கு இடையிலேயே அன்பு, கருணை என்பன பிரயோகத்திற்குரியன மாறாக விலங்குகளுக்கு அந்த அந்தஸ்து இல்லை என்பதனையும், அவை

மனிதர்களது பாவனைக்குரியவையாக உள்ளன என்பதனையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. இவ்வாறு இறைவனின் சாயலில் படைக்கப்பட்டுள்ள மனிதர்கள் விலங்குகள் தொடர்பில் நேரடியான கடப்பாடுகள் எவற்றினையும் கொண்டிருக்கவில்லை எனினும் அவர்கள் விலங்குகள் தொடர்பில் நடந்துகொள்கின்ற விதம் மனிதர்கள் மீது நடந்துகொள்ளும் விதத்திலும் தாக்கம் செலுத்தும் என்பதன் அடிப்படையில் விலங்குகளை நியாயமான வகையில் நடத்துவதற்கான நேரடியற்ற கடப்பாட்டினைக் கொண்டுள்ளனர் (McLaughlin, 2014, p. 8-19, & Camosy, 2012, p. 110-114) என்ற கருத்து இவரினால் முன்வைக்கப்படுவதானது அனைத்திலும் மனிதர்களது நலனை முன்வைக்கின்ற மனப்பான்மையாக இறையியல் பின்னனியில் கட்டமைக்கப்பட்ட மானுடமையவாத சிந்தனையாக (Theocentrically Grounded Anthropocentrism) அமைந்துள்ளது.

அதுபோல Summa Theologica நூலின் இரண்டாவது பகுதியில் இடம்பெறும் அறுபத்து நான்காவது வினா "தாவரங்களை, மனிதர்கள் அல்லாத விலங்குகளை கொல்வது பாவமான காரியமாகுமா?" என்ற வினாவிற்கு 'நீ கொலை செய்யாதே' (Thou shalt not kill) என்பதற்குள் தாவரங்களும், விலங்குகளும் உள்வாங்கப்படவில்லை ஏனெனில் அவை மனிதர்களுடன் இணையான தொடர்பில் இல்லை. இந்நிலையில் ஒருவர் பிறிதொருவருக்கு சொந்தமான விலங்கு ஒன்றினை கொலை செய்வது பாவமாக இருப்பது அந்த விலங்கு கொலை செய்யப்படுவது என்பதனால் அல்ல மாறாக இன்னொருவருக்கு சொந்தமான சொத்தினை பாதிப்புக்கு உள்ளாக்குதல் என்ற அடிப்படையிலேயேயாகும். இது திருட்டு அல்லது கொள்ளை என்பதற்கு இணையானதாக நோக்கப்படுவதாக இருக்கும் என்று பதில் முன்வைக்கப்படுகின்றது.

புனிதர் அகஸ்டின் "உணர்வற்ற தாவரங்களை விட உணர்வுள்ள மிருகங்கள் மேலானவை, அறிவுத்திறனற்ற விலங்குகளைவிட அறிவுத்திறனுள்ள மனிதர்கள் மேலானவர்கள், நிலையற்ற மனிதர்களை விட நிலையான இருப்புடைய தேவதைகள் உயர்வானவை" என்று தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள், தேவதைகள் என கீழ்நிலைப்பட்டவையில் இருந்து உயர்நிலையில் இருப்பவை என இயற்கையில் வரையறையினை மேற்கொள்கின்றார். இது உயர்நிலையில் உள்ள இறைவனை அண்மித்த நிலையில் மனிதர்கள் உள்ளனர், இறைநிலையினை, விமோச்சனத்தை அடையும் தகுதி அவர்களுக்கே உள்ளது கீழான நிலையில் உள்ள ஏனையவை மனிதர்களது அந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு உடல், வலி, துன்பம் என்பவற்றினை விட ஆன்மா, பகுத்தறிவு என்பவை உயர்வாக இருப்பதே காரணமாகும். இது உயர்வான நிலையில் உள்ள கடவுளுக்கு அண்மித்த நிலையில் உள்ள மனிதன் தன்னைவிட கீழான நிலையில் உள்ள விலங்குகளை தன்னுடைய தேவைக்கு, விருப்பத்திற்கு இணங்க பயன்படுத்த முடியும் என்ற வெளிப்பாட்டினைக் கொண்டதாக உள்ளது. இங்கு விலங்குகள் 'ஆசிர்வதிக்கப்பட்ட நிலையிலோ அல்லது அவலமான நிலையிலோ இல்லை' (cannot be either blessed or wretched) மற்றும் தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் என்பவற்றுக்கு இடையில் பொதுவாக பின்பற்றப்பட வேண்டிய உரிமைகளோ, கடமைகளோ கிடையாது, மனிதர்களே இறைவனுடன் நித்திய வாழ்க்கைக்கு திரும்ப முடியும் விலங்குகளினால் முடியாது, மனிதர்களே பகுத்தறிவான ஆன்மாவைக் கொண்டுள்ளனர், விலங்குகள் உணர்ச்சிசார்ந்த ஆன்மாவினையே கொண்டுள்ளனர். இவ்வாறு விலங்குகள் மனித சமூகத்துக்கு இணையானவையாக இல்லை என்ற அடிப்படையில் மனிதர்களினால் நுகர்வுக்கு உள்ளாக்கப்படுவதற்காக கொலை செய்யப்படுவதற்கு தெய்வீக சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற கருத்து நிலைநிறுத்தப்பட்டுள்ளது (Steiner, 2005, p. 116-119).

இவர்களின் தொடர்ச்சியாக பதின்மூன்றாம் நூற்றாண்டில் புனிதர் அக்வைனஸ் விலங்குகள் மனிதர்களுக்கு நிகரானவை அல்ல அவை தொடர்பில் எந்த கடப்பாட்டினையும் கொண்டவர்களாக மனிதர்கள் இல்லை. ஏனெனில் மனிதர்கள் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டுள்ளனர், மனிதர்கள் மாத்திரமே இறப்பற்ற ஆன்மாவினைக் கொண்டுள்ளனர், மற்றும் இயேசு கிறிஸ்துவின் உடலில் கடவுள் மனிதனாகவே பூமிக்கு வந்துள்ளார் என்ற கருத்துக்களை முன்வைத்துள்ளார். இத்தகையதாகி குறித்த மூன்று புனிதர்களது கருத்துக்களும் கிறிஸ்தவத்தில் பலமாக உள்வாங்கிக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் கிறிஸ்தவ சமயத்தவர்கள் விலங்குகள் தொடர்பாக கொண்டுள்ள மனப்பாங்கிலும் தாக்கம் செலுத்தும் இயல்பினைக் கொண்டவையாக உள்ளனமை கவனத்தில் கொள்ளத்தக்கதாக உள்ளது (DeMello, 2012, p. 302).

### *3.4 இஸ்லாம் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள்*

தொடர்ந்து இஸ்லாமிய சமயத்தில் விலங்குகளது உரிமைகள் மற்றும் நலன்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கருத்துக்களை நோக்குகின்றபோது அல்-குரானும் ஹாதித்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. அல்-குரானின் (Al-Quran) நூற்று பதினான்கு அத்தியாயங்களில் ஆறு அத்தியாயங்கள் விலங்குகளின் பெயர்களைக் கொண்டவையாக உள்ளன. அவை முறையே பசு (2), கால்நடை (6), தேனி (16), எறும்பு (27), சிலந்தி (29), யானை (105) என்பனவாகும். எனினும் இவற்றின் பிரதான உள்ளடக்கங்கள் குறித்த விலங்குகள் தொடர்பானவை அல்ல என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. அல்-குரானில் அனைத்து வல்லமைகளும் பொருந்திய இறைவன் வயிற்றினால் நகர்பவை, இரண்டு கால்களினால், நான்கு கால்களினால் நடப்பவை என அனைத்து விலங்குகளையும் நீரில் இருந்து (24:45) ஆண் பெண் என சோடிகளாக (36:36) படைத்தார் என்று குறிப்பிடப்படுகின்றது. படைப்பில் மனிதர்கள் விலங்குகளில் இருந்து வேறுபட்ட நிலையில் உள்ளனர் எனினும் தீய சக்திகளை வழிபட்டு இறைவனுடைய கோபத்துக்கு ஆளாகின்ற நிலையில் அவர்கள் பன்றிகளாக, குரங்குகளாக கீழ்நிலை விலங்குகளாக பிறப்பிக்கப்படுகின்றனர் (5:60). இது இயல்பிலேயே (குறிப்பிட்ட சில) விலங்குகள் மனிதர்களை விட தாழ்நிலையில் உள்ளவை என்பதனை வெளிப்படுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது. மேலும் அனைத்து விலங்குகளும் மனிதர்களது நலன்களுக்காகவே இறைவனால் படைக்கப்பட்டவை என்ற நம்பிக்கை முஸ்லிம்களினால் பின்பற்றப்படுகின்றது. இவை மிகவும் அறிவார்ந்தமான வகையில் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர அநாவசியமாக துன்பங்களை, கொடூரங்களை அவற்றிற்கு மேற்கொள்தல் தடுக்கப்பட்டுள்ளது. இதில் விளையாட்டுக்காக பயன்படுத்துதல், வேட்டையாடுதல் என்பன முற்றிலும் தடைசெய்யப்பட்டவையாக உள்ளன. மனிதர்கள் விலங்குகளை நடாத்துகின்ற விதத்திற்கு இணங்க மறுவுலகில் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக உள்ளனர் என்ற நம்பிக்கையும் பின்பற்றப்படுகின்றது. உணவுக்காக விலங்குகள் கொல்லப்படும்போது பரிந்துரைக்கப்பட்ட நியமங்களை பின்பற்றுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் இறைச்சி உண்பது சுவர்க்கத்தின் சுவைகளில் ஒன்றாக உள்ளது எனினும் உரிய நியமங்களை பின்பற்றி தயாரிக்கப்படாத இறைச்சி உண்பதற்கு அனுமதிக்கப்படவில்லை (Campo, 2009, p. 43-48).

ஆப்ரகாம் தன்னுடைய மகனை பலியிடுவதற்கு துணிந்து செயற்பட்ட நாளினை நினைவுகூறுவதற்காக பின்பற்றப்படுகின்ற தியாகத்திருநாள் (Feast of Sacrifice) உள்ளடங்களாக புனித நாட்களில் விலங்குகள் பலியிடப்பட்டு மக்களுக்கு உணவாக்கப்படுவது இஸ்லாமியர்களினால் பொதுவாக பின்பற்றப்படும் ஒரு வழக்கமாக உள்ளது. இவ்வாறான இறைச்சிக்காக பலியிடலின்போது (dhabh) பரிந்துரைக்கப்பட்ட முறைகள் பின்பற்றப்படுவது அவசியமாக்கப்படுகின்றது. எனினும் இப்பலியிடலானது அல்குரானில் செய்யும்படி வேண்டப்பட்ட (Not Required) ஒன்றாக இல்லாமல் பாரம்பரியமாக காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அனுமதிக்கப்பட்ட (Permited) ஒன்றாகவே குறிப்பிடப்படுவதுடன் இதன்போது இறைச்சியோ இரத்தமோ அல்லாமல் ஏனைய உயிரினங்களைவிட உடல் அமைப்பிலும், சிந்தனையாற்றலிலும் உயர்ந்ததாக படைக்கப்பட்டுள்ள (95:4) மனிதர்களது சரியான பக்தியே (Piety) இறைவனை அடைகின்றன என்று குறிப்பிடப்படுகின்றது (22:37) (Foltz, 2006, p. 14). இவற்றுடன் குழந்தை பிறந்து ஏழாவது நாளில் இறைவனுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகவும், மக்காவிற்கான புனித யாத்திரையின்போது மேற்கொண்ட பாவங்களுக்கு பரிகாரம் செய்வதற்காகவும் அதிலிருந்து திரும்பிய பின்னர் விலங்கு பலியிடப்படுவதும் பொதுவான ஒரு வழக்கமாக கொள்ளப்படுகின்றது (DeMello, 2012, p. 303).

இங்கு மனிதர்கள் இறைவனது ஏனைய படைப்புக்கள் அனைத்தினையும் விட உயர்வான நிலையினைக் கொண்டவையாக குறிப்பிடப்பட்டு அவர்களில் உயர்வானவரே இறைத்தூதராக உள்ளார் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. விலங்குகள் குறிப்பாக கால்நடைகள் மனிதர்களது பல்வேறு நலன்களுக்காக படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு உணவு, உடை, அழகுணர்வு, சுமை சுமத்தல், பயணம் செய்தல் என மனிதர்களது பல்வேறு தேவைகளை நிறைவு செய்வதற்காக விலங்குகளை படைத்த இறைவன் மனிதர்கள் தொடர்பில் மிகவும் அன்புள்ளவனாக உள்ளான் (16:5-8). எவ்வாறாயினும் மனிதர்களது நலனுக்காக மாத்திரமே இந்த உலகம் இல்லை மாறாக இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரிகளும் இறைவனுடைய உன்னதமான படைப்புக்களாகும். இவை தனித்த உயிரினங்கள் அல்ல அவை ஒவ்வொன்றும் மனிதர்களைப்போன்று சமூகமாகவே வாழ்கின்றன (6:38) இவை தங்களுக்கேயுரித்தான பொருத்தமான வழிமுறைகளில் இறைவனை வழிபடுகின்றன. அந்த வழிபாடுகளை இறைவன் அறிகின்றான், ஏற்றுக்கொள்கின்றான் (24:41) மேலும் விலங்குகள் இறைவனுடைய

வார்த்தைகளை புரிந்துகொள்ளும் திறமையினைக் கொண்டவையாக உள்ளன. தேனிக்களை மலைகளிலும், மரங்களிலும், மக்களின் வாழிடங்களிலும் தேனை சேமிக்கும்படி இறைனே பணித்ததாக குறிப்பிடப்படுகின்றது. எனினும் மனிதர்களே தங்களது சுயாதீன சித்தத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற இயலுமையினைக் கொண்டவர்களாக உயர்வான இடத்தில் உள்ளனர். இந்நிலையில் விலங்குகளை பொருத்தமாக வகையில் பாதுகாப்பது மனிதர்களது பொறுப்பாக உள்ளது என்று அல்குரானில் குறிப்பிடப்படுகின்றது (Waldau, & Patton, 2000, p. 151 - 154).

தொடர்ந்து ஹாதித்களில் (*Hadiths*) குறிப்பிடப்படும் கருத்துக்களை நோக்குகின்றபோது விலங்குகளுக்கு நன்மையான விடயங்களை செய்வது மறுமையில் நற்பேறுகளை பெற்றுத்தரும் ஒன்றாக குறிப்பிடப்படுகின்றது. நபிகள் நாயகம் அவர்கள் விலங்குகளுடன் பேசுகின்ற திறன் கொண்டவராக இருந்தார் எனவும் சில விலங்குகள் அவர்களிடம் நேரடியாக பேசி தங்களது குறைகளை தீர்த்துக்கொண்டதாகவும் பதிவுகள் உள்ளன. பொதுவாக மனிதர்களது பாவனைக்குரிய விலங்குகளுக்கும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் ஓய்வு வழங்கப்படுவது அவசியமாக உள்ளது. இதன்படி ஒட்டகங்களை பயணத்தின் போதல்லாது வெறுமனே அமர்ந்திருப்பதற்கான மேடைகளாக பயன்படுத்த வேண்டாம் என்றும், முகத்தில் தாக்குவது, குறியிடுவது என்பன தவறானது என்றும், புல்வெளியின் ஊடாக பயணம் செய்யும்போது அவை உண்பதற்காக மெதுவாக செல்லும்படியும் தன்னுடைய தோழர்களை முகம்மது நபிகள் அறிவுறுத்தியுள்ளார். மேலும் பொழுதுபோக்கிற்காக வேட்டையாடுதல் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், வன விலங்குகளது உடல் பாகங்கள் உடைக்காகவோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ பயன்படுத்தப்படக்கூடாது. தவளை, நீண்டவால் குருவி (Magpies) ஆகிய உயிரினங்கள் கொலை செய்யப்படுவது கட்டாயம் தவிர்க்கப்பட்டதாகவும், எறும்பு மற்றும் தேனி என்பவை பாதுகாக்கப்பட வேண்டியவையாகவும், தேள், எலி, பாம்பு, காட்டு நாய் போன்றவை கொல்லப்பட வேண்டியவையாகவும், விலங்குகளுடன் மனிதர்கள் உடலுறவுகொள்வது பாவமான காரியமாகவும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் இருவருமே கொலை செய்யப்பட வேண்டியவர்களாகவும் குறிப்பிடப்படுகின்றது. ஒரு சிட்டுக்குருவியேயாயினும் அநாவசியமாக அதனை கொலை செய்பவர்கள் மறுமை நாளில் இறைவனிடம் அதற்கான பதிலை வழங்கியாக வேண்டும், விலங்குகள் ஒன்றின் முன்னால் இன்னொன்று கொலை செய்யப்படுவதோ, கொலை செய்யும் கத்தியினை விலங்குகளின் முன்னால் கூர்மையாக்குவதோ அனுமதிக்கப்படவில்லை (Foltz, 2006, p. 22-25) என்ற கருத்துக்கள் உயிரினங்களது உயிர்ப்பாதுகாப்பு மற்றும் உளப்பாதுகாப்பு தொடர்பில் இஸ்லாம் கொண்டுள்ள உயர்வான கரிசனையினை வெளிப்படுத்துவதாக உள்ளன.

## 4. பகுப்பாய்வு

ஆப்ரகாமிய சமயங்களில் விலங்குகள் மனிதர்களின் நுகர்வுக்காக உள்ளன ஆனால் அவை தொடர்பில் தேவையற்ற வலி, துன்பம் ஏற்படுத்தப்படுவதோ அல்லது கொடூரங்களுக்கு உள்ளாக்கப்படுவதோ தவிர்க்கப்பட வேண்டியதாக உள்ளது என்ற கருத்து பொதுவாக நிலைநிறுத்தப்படுவதாக உள்ளது. எவ்வாறாயினும் ஆதியாகமத்தில் உலகத்தையும் அதில் உள்ள உயிரினங்களையும் ஆளுகை செய்யுங்கள் (Dominion over) என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளமை அவற்றினை பொறுப்புடன் பாதுகாக்கின்ற செயற்பாட்டினை மேற்கொள்பவர்களாக மனிதர்களை படைத்தமையினை குறிக்கின்றதே (Responsible Stewardship) தவிர நுகர்வுக்கு உள்ளாக்குங்கள் (Consumption and Exploitation) என்பதனை வெளிப்படுத்தவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. இதனை உறுதிசெய்கின்ற கருத்து ஆதியாகமத்தின் வாசகமாகிய 'பூமி முழுவதிலும் விதைகளை உள்ளடக்கியிருக்கின்ற கனிகளைக் கொண்ட மரங்களை நான் உங்களுக்காக தந்திருக்கின்றேன் அவை உங்களுக்கு உணவுக்காக ஆக்கப்பட்டவை. புவியில் உள்ள அனைத்து உயிரினங்கள், வானத்தில் உள்ள பறவைகள், நிலத்தில் நகர்கின்ற உயிரினங்கள், வாழ்க்கை மூச்சினை சுவாசிக்கின்ற அனைத்திற்கும் பசுமையான தாவரங்களை உணவுக்காக தந்துள்ளேன்' என்று அமைகின்றது. ஆனால் பின்னால் அமைகின்ற இந்த கருத்து கவனத்தில் கொள்ளப்படாது முன்னர் சொல்லப்பட்ட கருத்தே தனித்து புரிந்துகொள்ளப்பட்டிருப்பது விலங்குணவுத் தொழிற்சாலைகளிலும், விஞ்ஞான ஆய்வுகூடங்களிலும் விலங்குகள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதற்கும் அதற்கான நியாயப்படுத்தல்கள் முன்வைக்கப்படுவதற்கும் காரணமாக அமைகின்றது.

இவ்வாறு விலங்குகள் மனித பயன்பாட்டுக்குரியவை என்ற கருத்து ஏற்படுத்தப்பட்ட பின்னர் அவை தொடர்பில் கனிவாகவும், இதமாகவும் நடந்துகொள்வற்கு கடவுள் விரும்புகின்றார் என்று குறிப்பிடப்படுவதும் மனிதர்களது சுயநலனை அடிப்படையாகக் கொண்டே என்பதும் புரிந்துகொள்ளப்படக்கூடியதாக உள்ளது. மார்க்சிய கண்ணோட்டத்தில் இதனை அணுகுகின்றபோது விலங்குகள் ஏனைய பொருற்களைப்போன்று மனிதர்களினால் உற்பத்தி செய்யப்பட முடியாதவை எனவே கடவுளினால் படைக்கப்பட்டவையாக கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் கால்நடை வளர்ப்பினால் பொருளாதாரத்தை பெற்றுக்கொண்ட சமூகங்களில் அவற்றில் இருந்து உச்ச பயனை பெறுவதற்காக அவை கவனமாக பராமறிக்கப்படுவது அவசியமாகின்றது என்ற நிர்ப்பந்தமே அவற்றுடன் தொடர்புடைய நிபந்தனைகள் ஏற்படுத்தப்படுவதற்கு காரணமாக அமைந்திருந்தது. இதன் மேம்பட்ட ஒரு நிபந்தனையே உடமையாளர் இல்லாத விலங்குகள் துன்பப்படுகின்றபோதும் அவற்றுக்கு உதவுங்கள் என்று கடவுள் பணித்துள்ளார் என்பது அமைகின்றது. இதன்படி கவனமான பராமறிப்புடன் வளர்க்கப்படுகின்ற விலங்குகள் அவை வலியை உணராதவகையில் கடவுளின் பெயரினால் பரிந்துரைக்கப்பட்ட முறைகளை பின்பற்றி கொலை செய்யப்பட்டு மனிதர்களுக்கு உணவாக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்ற நிலையானது பகுத்தறிவுத்திறன்மிக்க மனிதனுடைய மிகத்திறமையான போதனையாகவே நோக்கப்பட வேண்டியுள்ளது.

மேலும் இன்னொருவருக்குச் சொந்தமான விலங்குகள் அவருடைய அனுமதியின்றி கொலை செய்யப்படுவது திருட்டு அல்லது கொள்ளை என்ற அடிப்படையில் பாவமான காரியமாக அமையுமே தவிர அந்த விலங்கின் உயிர் போக்கப்பட்டது என்ற அடிப்படையில் அல்ல என்று மேற்கொள்ளப்படுகின்ற போதனையானது சொத்துடமைச் சமூகக் கட்டமைப்பில் மனிதர்களது சொத்துக்களை பாதுகாப்பதற்கு சமய போதனைகள் பயன்படுத்தப்பட்ட முறையினை வெளிப்படுத்துகின்றதே தவிர விலங்குகள் தம்மளவில் பெறுமானத்தைக் கொண்டவை என்பது சமயபோதகர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படாத நிலை காணப்பட்டமையினையும் மனிதர்கள் தங்களுடைய தேவைக்கு இணங்க விலங்குகளை பாவனைக்கு உள்ளாக்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளமையினையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

ஆதியாகமம் மனிதர்கள் ஏனைய உயிரினங்கள் மீது ஆதிக்கம் செலுத்துங்கள் என்று குறிப்பிட்டமையினை அவற்றினை நுகர்வுக்கு உள்ளாக்குங்கள் என்று எடுத்துக்கொண்டமையும், கனிகள், தாவரங்களை நுகர்வுக்கு உள்ளாக்குங்கள் என்று குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பத்தில் விலங்குணவினை இறைவனுக்கு சமர்ப்பித்து புனிதமாக்கி அதனை நுகரமுடியும் என்று கற்பிதம் செய்துகொண்டமையும் மனிதர்கள் தங்களுடைய நலனை முன்நிறுத்தி எவ்வாறு பகுத்தறிவுபூர்வமான விளக்கங்களை முன்வைத்து பின்பற்றி வருகின்றனர் என்பதனையும் வெளிப்படுத்துகின்றது. மேலைத்தேய நாகரீகங்களை வளர்ப்பதில் பங்களிப்பு செய்துள்ள இந்த சமயங்களில் விலங்குகள் தொடர்பாக பொதிந்துள்ள இத்தகைய வழிகாட்டல்களே அந்நாகரீகத்தின் சமூகப்பண்பின் அடிப்படைக்கூறினை (Ethos) கட்டமைப்பு செய்வதிலும் பங்களிப்பு செய்துள்ளது. விலங்குகள் தொடர்பாக இவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள், அபிலாசைகள் என்பன அவர்களுக்கேயான சிறப்பியல்புகளாக நூற்றாண்டுகளாக பின்பற்றப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இது சமயம் இறைமையப்படுத்தலின் (Theocentric) அடிப்படை நோக்கிலிருந்து விலகி மானுடமையப்படுத்தலாக (Anthropocentrism) உள்ளமையினை அல்லது தேவைக்கேற்ற அளவில் இறையியல் பயன்படுத்தப்பட்டு கட்டமைக்கப்பட்ட மானுடமையவாத சிந்தனையாக உள்ளமையினை தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறு பரிணாம வளர்ச்சியின் மேல்நோக்கிய பாய்ச்சலில் இறைவனை அண்மித்த நிலையில் உள்ள மனிதர்களே அனைத்திற்குமான அனுமதியினை, ஆசிர்வதிப்பினை பெற்றுள்ளனர் என்று மனித ஆழ்மனதில் பதியவைக்கப்பட்டுள்ள சிந்தனையே மனிதர்களது தான்தோன்றித்தனமான, பொறுப்பற்ற செயற்பாடுகளுக்கும் இயற்கையின் அழிவிற்கும் பங்களிப்பு செய்துள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. பொதுவாக சமயங்கள் மனிதர்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்கு வழிகாட்டுபவை என்ற கருத்து நிலைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் அம்மனிதன் வாழ்கின்ற இயற்கையின் ஒரு அங்கமாக உள்ள ஏனைய உயிரினங்கள் மனிதர்களது தேவைக்கு இணங்க விருப்பம்போல ஆனால் கவனமாகவும் அதிகரித்த வலியினையும் துன்பத்தையும் ஏற்படுத்தாது நுகர்வுக்கு உள்ளாக்கப்பட, பயன்படுத்தப்பட வேண்டும் என்று வழிகாட்டல் செய்வதானது ஒரு கடவுள் தன்னுடைய சாயலில் மனிதர்களை படைக்கவில்லை மாறாக மனிதனே தன்னுடைய சாயலில் கடவுளை படைத்து அதன் துணைகொண்டு தன்னுடைய விருப்பார்வங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயற்சிக்கின்றான் என்ற சிந்தனையினை உறுதிப்படுத்துவதாக உள்ளது. எவ்வாறாயினும் ஒப்பீட்டு நோக்கில் ஏனைய இரண்டு ஆப்ரகாமிய

சமயங்களைவிட இஸ்லாம் விலங்குகளது நலன் தொடர்பில் உயர்வான வெளிப்படுத்தல்களைக் கொண்டுள்ளமை வெளிப்படையாக உள்ளது.

## 5. முடிவுரை

மனித குலத்தின் வளர்ச்சிப்படிநிலையில் சமயங்களின் வழிகாட்டல்கள் பெரும் செல்வாக்குள்ளவையாயுள்ளன. மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான உறவும் இந்த வளர்ச்சியில் மிகப்பெரும் வகிபாகமுடையதாக உள்ளது. சமயங்களில் விலங்குகளது உடல் - உள நலன்களை பாதுகாப்பதற்கான வழிகாட்டல்களும் அறிவுறுத்தல்களும் முன்வைக்கப்பட்டுள்ள நிலையிலும் அவை மனிதர்களினால் புறக்கணிக்கப்பட்டு மனித நுகர்விற்கான, இலாபமீட்டலுக்கான இயந்திரங்களாகவே விலங்குகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இதற்கு சமயங்களின் போதனைகளும் காரணமாக அமைந்துள்ளன அல்லது பகுத்தறிவுத்திறன் மிக்க மனிதர்களினால் போதுமான வகையில் தங்களுக்கு சாதகமான நியாயங்கள் சமய எடுத்துக்காட்டுக்கள் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மனிதர்கள், சமயங்கள், விலங்குகள் என்ற மும்முனைத் தொடர்பினை ஏற்படுத்தி விலங்குகளது நலன் தொடர்பாக சிந்திக்கவும் செயற்படவும் கூடியதாக உள்ளது. இதில் நான்காவது முனையாக நவீன விஞ்ஞான வளர்ச்சியும் இணைத்துக்கொள்ளப்படக்கூடியதாக உள்ளது. ஏனெனில் விஞ்ஞானத்தின் வளர்ச்சியுடனேயே தொழிற்சாலைகளிலும், பண்ணைகளிலும், விஞ்ஞான ஆய்வுகூடங்களிலும் விலங்குகள் அதிகளவில் உடல் மற்றும் உள ரீதியான துன்பங்களை எதிர்கொள்வது அதிகரித்தது. அதேவேளையில் நவீன விஞ்ஞான ஆய்வுகள் விலங்குகள் உண்மையிலேயே சிக்கலான உணர்வுகளையும், எதிர்பார்ப்புக்களையும் கொண்ட சமூக விலங்குகளே என்பதனை நிரூபணம் செய்து வருகின்றன. குறிப்பாக விலங்குகளது புறவயத்தேவைகளை நிறைவேற்றி அவற்றினை மனிதர்களது நோக்கில் நல்லவகையில் பராமறிப்பது போதுமானது அல்ல மாறாக அவற்றுக்கென தனிப்பட்ட உளவியல் தேவைகள் உள்ளன அவை நிறைவேற்றப்படாதநிலையில் விலங்குகள் அசௌகரியத்தை உணர்கின்றன, விரக்தியடைகின்றன என்ற உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஐக்கிய அமெரிக்க நாட்டு உளவியலாளராக ஹாரி ஹார்லோ குரங்குகளை வைத்து மேற்கொண்ட பரிசோதனைகளின் (Harry Harlow's Experiments) முடிவுகள் இதற்கான சிறந்த உதாரணங்களாகும். இவ் உண்மைகள் விலங்குகளது நலன் தொடர்பில் சமயங்கள் முன்வைக்கும் போதனைகளுக்கான விஞ்ஞானரீதியான பின்னூட்டல்கள் அல்லது வலுப்படுத்தல்களாக அமைகின்றன. எவ்வாறாயினும் இங்கு பிரச்சினைக்குரிய விடயமாக இருப்பது சுயநலன் மிக்க பகுத்தறிவுத்திறன் கொண்ட மனிதர்களினால் அவை இல்லாதவை என்று குறிப்பிடப்படும் விலங்குகளது நலன்களை பாதுகாப்பதற்கு இந்த சமய வழிகாட்டல்களும், விஞ்ஞான உண்மைகளும் போதாமையாக இருப்பதேயாகும்.

இவ்வாறு மனிதர்கள் தங்களது வளர்ச்சிக்காக, சௌகரியத்திற்காக விலங்குகளை பயன்படுத்தும் முறைகள் அவை உடல் உள ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு காரணமாக அமைந்துள்ளன என்ற உண்மை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த விஞ்ஞான உண்மை மனிதர்களால் பரவலாக அறிந்துகொள்ளப்பட்டு அவர்கள் விலங்குகள் தொடர்பில் அக்கறையுணர்வுடன் செயற்படுகின்றபோது அவற்றின் நலன்களை பாதுகாப்பது சாத்தியமானதே. இதற்கு கடவுள் மனிதர்களை படைத்து விலங்குகள் உள்ளடங்களாக உள்ள இயற்கையினை வெற்றிகொள்ளும்படி ஆசிர்வதித்தார் என்ற ஆதியாகம போதனைகளுக்கு முரணாக மனிதர்கள் விலங்குகளில் இருந்து பரிணாமம் பெற்றவர்களே மனிதர்கள் என்ற விஞ்ஞான உண்மையினை ஏற்றுக்கொள்வதும் அவசியமாக உள்ளது.

மேற்குறித்த விடயங்கள் சமகாலத்தில் விலங்குகளது நலன்களை பாதுகாப்பதற்காக தனிநபர் அளவிலும் சமூகமாகவும் இணைந்து மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு முயற்சிகளுக்கு சமயங்களுடன் இணைந்து விஞ்ஞான அறிவும் பங்களிப்பு செய்யும்போது உயர்வான நேர்நிலையான விளைவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்ற உண்மையினை வெளிப்படுத்துகின்றன. ஆனால் இதற்கு இன்னும் நீண்டகாலத்திற்கு மனித இனம் பயணிக்கவேண்டியிருக்கலாம். ஏனெனில் சகமனிதர்களை சொத்துக்களாகவும், சொத்துக்களை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களாகவும் பாவித்தே நூற்றாண்டுகளை கடந்து மனித இனம் தற்போதைய செழிப்புநிலையை அடைந்துள்ளது. அதில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு தொலைநோக்குக்கொண்ட தலைவர்களதும், ஒன்றினைந்த மக்களதும் புரட்சிகரமான செயற்பாடுகள் அவசியமாக இருந்துள்ளன. இந்நிலையில் மனிதர்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள புனைவு அடுக்கமைவு நிலையில் கடவுள், தேவதைகள், மனிதர்கள், விலங்குகள் என்று இறுதியான இடத்தினையே பெற்றுள்ள விலங்குகளது நலன்களை பாதுகாப்பதற்கு அதீத மனிதாபிமான உணர்வின் உருவாக்கம் அவசியமாக உள்ளது.

**உசாத்துணைகள்**

Bovenkerk, B., & Keulartz, J. (2016). *Animal Ethics in the Age of Humans – Blurring Boundaries in Human Animal Relationship*

Camosy, C. C. (2012). *Pert Singer and Christian Ethics – Beyond Polarization.* USA: Cambridge University Press

Compo, J. E. (2009). *Encyclopedia of Islam.* USA: Facts on File, Inc.

DeMello, M. (2012). *Animals and Society – An Introduction to Human Animal Studies.* USA: Columbia University Press

Dorff, E. N., & Crane, J. K. (2013). Jewish Animal Ethics - *The Oxford Handbook of Jewish Ethics and Morality.* USA: Oxford University Press

Foltz, R.C. (2006). *Animals in Islamic Tradition and Muslim Cultures.* England: Oneworld Publications

Gilhus, I. S. (2006). *Animals, Gods and Humans – Changing Attitudes to Animals in Greek, Roman and Early Christian Ideas.* USA: Routledge Publications

Hamilton, V. P. (1990). *The Book of Genesis – Chapters 1 – 17.* USA: William B. Eerdmans Publishing Company

Isaacs, R. (2000). *Animals in Jewish Thought and Tradition*. USA: Jason Aronson, Inc

McLaughlin, R.P. (2014). *Christian Theology and the Status of Animals.* USA: Palgrave Macmillan

Passmore, J. A. (1974). *Man's Responsibility to Nature – Ecological Problems and Western Traditions.* USA: Scribner

Renenstein, L. (2008). *Commandments of Compassion: Jewish Teachings on Protecting Animals and Nature.* USA: Interfaith Council

Schweiker, W. (2005). *The Blackwell Companion to Religious Ethics* (Edi). USA: Blackwell Publications

Singer, P. (1995). *Animal Liberation* (2nd Edi). UK: The Bodley Head

St. Thomas Aquinas. (1920). *The Summa Theologia* – Online Edition, translated by Fathers of the English Dominican Province

Steiner, G. (2005). *Anthropocentrism and its Discontents – The Moral Status of Animals in the History of Western Philosophy.* USA: University of Pittsburgh Press

Waldau, P., & Patton, K. (2000). *A Communion of Subjects: Animals in Religion, Science, and Ethics.* USA: Columbia University Press